**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். CC 189/2017**
**வழக்கு சாட்சி. எ.சா.1**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | மனோகரன் | **ஜாதி:** | |
| **தந்தை பெயர்:** | மணி | **தொழில்:** | டைலர் |
| **கிராமம்:** | ஆளப்பிறந்தான் | **சமயம்:** | |
| **தாலுகா:** | | **வயது :** | 33/2024 |

**Solemnly affirmed in accordance with the provisions of oaths Act, 1969 (Act 44 of 1969)**

**<u>11.09.2024</u>**

**1, 2 எதிரிகள் ஆஜர்.**
**3, 4 எதிரிகள் ஆஜரில்லை. 3, 4 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை:**

நான் ஆளப்பிறந்தானில் வசித்து டைலர் வேலை செய்து வருகிறேன். எதிரிகள் விவேக், செந்தில்குமார், குடியரசு ஆகியோரது சகோதரியின் பெயர் தமிழரசியாகும். அ.சா.2 கௌசல்யா அ.சா.2 சுரேஷ் என்பவரது மனைவியாவார். அ.சா.2 கௌசல்யா என்பவர் எதிரிகள் விவேக், செந்தில்குமார், குடியரசு ஆகியோரது அக்கா மகள் ஆவார். அ.சா.3 தமிழரசி என்பவர் பன்னீர்செல்வம் என்பவரை இரண்டாவதாக திருமணம் செய்துள்ளார். மேற்படி பன்னீர்செல்வம் அ.சா.3 தமிழரசி ஆகியோரது மகள்தான் அ.சா.2 கௌசல்யா. அ.சா.2 கௌசல்யா பிறந்த பின்னர் அ.சா.3 தமிழரசிக்கும் பன்னீர்செல்வத்திற்கும் கருத்துவேறுபாடு ஏற்பட்டு அ.சா.3 தமிழரசி அவரது சகோதரரின் வீட்டில் வசித்து வந்தார். அப்போது அ.சா.3 தமிழரசியை எதிரிகள் விவேக், பாலமுருகன், குடியரசு, செந்தில்குமார் ஆகியோர்தான் பராமரித்து வந்தார்கள். அவர்கள் அ.சா.3 தமிழரசிக்கு தனியாக ஒரு வீடு கட்டிக்கொடுத்தார்கள். அ.சா.3 தமிழரசிக்கும் எதிரிகள் விவேக், பாலமுருகன், குடியரசு, செந்தில்குமார் ஆகியோருக்கும் இடையே சொத்து சம்மந்தமான பிரச்சனை இருந்துவந்தது. இது சம்மந்தமாக இருதரப்புக்கும் அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டது. அ.சா.1 சுரேஷ் என்பவருக்கும் எதிரிகள் தரப்பினருக்கும் இடையே எந்தவிதமான கைகலப்பும் ஏற்படவில்லை என கேள்விப்பட்டேன்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திலிருந்து நான் சுமார் ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் வசித்து வருகிறேன். எதிரிகள் கடையில் நான் வேலை பார்த்துவருகிறேன் அந்த வகையில் எதிரிகளை எனக்கு தெரியும். இந்த வழக்கின் சம்பவத்தினை நான் நேரில் பார்க்கவில்லை என்றால், சரிதான். இந்த வழக்கினை பொறுத்து நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது. கேள்விப்பட்டவைதான். எதிரிகளின் கடையில் நான் வேலை பார்ப்பதால் அவர்களுக்கு ஆதரவாக கேள்விப்படாததை கேள்விப்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. அ.சா.3 தமிழரசி

**மறுவிசாரணை:**
இல்லை